செ.வெ.எண்:02 நாள்:02.04.2021

# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, கிருஷ்ணிகிரி மாவட்டத்தில் 8,945 அலுவலர்களுக்கு தபால் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

---

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாத 80 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் தங்களது வாக்குகளை தபால் மூலம் செலுத்தலாம் என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 80 வயதுக்கு மேற்பட்ட 28,543 வாக்காளர்களும், 13,072 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் உள்ளனர்.

அதன்படி, தபால் மூலம் வாக்களிக்க ஏதுவாக படிவம் "12டி (12D)" அனைவருக்கும் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்துள்ள 80 வயதுக்கு மேற்பட்ட மூத்தகுடிமக்கள் 2,330 வாக்காளர்களிடமிருந்தும், 547 மாற்றுத்திறனாளி வாக்காளர்களிடமிருந்தும் மொத்தமாக 2,877 படிவம் "12டி (Form-12D)" பெறப்பட்டது. இவர்களிடமிருந்து 25.03.2021, 26.03.2021, ஆகிய நாட்களில் 2,573 தபால் வாக்குகள் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு இரண்டாவது வாய்ப்பாக 03.04.2021 அன்று தபால் வாக்கு செலுத்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் பணியில் ஈடுபடும் 11,032 அலுவலர்களுக்கு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 17.03.2021 அன்று நடைபெற்ற முதற்கட்ட பயிற்சியில் 9,843 நபர்கள் பங்கேற்றுள்ளனர். 27.03.2021 அன்று அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெற்ற 2-ம் கட்ட பயிற்சியில் 10,181 நபர்கள் பங்கேற்றனர். 17.03.2021 மற்றும் 27.03.2021 ஆகிய நாட்களில் நடைபெற்ற பயிற்சியில் 1,920 அலுவலர்கள் தபால் வாக்கு அளித்துள்ளனர். கிருஷ்ணிகிரி மாவட்டத்தில் 8,945 அலுவலர்களுக்கு தபால் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிற மாவட்டங்களைச் சார்ந்த தேர்தல் அலுவலர்களுக்கு 2,148 படிவம்-12 தபால் வாக்கு சீட்டுகள் அனுப்பப்பட்டுள்ளது. விடுபட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 03.04.2021 அன்று நடைபெறும் மூன்றாம் கட்ட பயிற்சியில் தபால் வாக்கு செலுத்த கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதி பயிற்சி மையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுபட்ட நபர்கள் 02.05.2021 அன்று காலை 8 மணி வரை வாக்கு எண்ணும் மையத்திற்கு தங்கள் வாக்குகள் வந்து சேரும் பொருட்டு தபால் மூலம் வாக்களிக்கலாம்.

தொடர்ந்து, காவல் துறையில் தபால் வாக்கு அளிக்க விண்ணப்பித்துள்ள 986 காவலர்களுக்கு 03.04.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளின் பயிற்சி மையங்களிலும் தபால் வாக்கு பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 ல் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 1071 வாக்குசாவடி நிலையங்களில் காவல்துறையினர் பணியாற்ற தேர்வு செய்யும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாக கூட்டரங்கில் இன்று (02.04.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.டி.பல்சானா இஆப., (51.ஊத்தங்கரை, 52.பர்கூர்), திரு.பார்த்த சாரதி சென்ஷர்மா இஆப., (53.கிருஷ்ணகிரி, 54. வேப்பனஹள்ளி), காவல் துறை பார்வையாளர் திரு.சுனில் பாஸ்கர் இகாப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இகாப., ஆகியோர் முன்னிலையில் காவல்துறை அலுவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 51.ஊத்தங்கரை (தனி) சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 168 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 111 காவலர்கள், 37 தலைமை காவலர்கள், 20 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 168 காவலர்களும், 52.பர்கூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 161 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 115 காவலர்கள், 38 தலைமை காவலர்கள், 08 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 161 காவலர்களும், 53.கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 142 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 90 காவலர்கள், 34 தலைமை காவலர்கள், 18 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 142 காவலர்களும், 54.வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 221 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 156 காவலர்கள், 63 தலைமை காவலர்கள், 2 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 221 காவலர்களும், 55.ஓசூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 160 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 63 காவலர்கள், 68 தலைமை காவலர்கள், 29 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 160 காவலர்களும், 56.தளி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட 219 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 123 காவலர்கள், 85 தலைமை காவலர்கள், 11 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என 219 காவலர்கள் என மொத்தம் 1,071 வாக்குச்சாவடி நிலையங்களுக்கு 658 காவலர்கள், 325 தலைமை காவலர்கள், 88 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என மொத்தம் 1,071 காவலர்கள் பணியாற்றும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளம் வாயிலாக சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**